செ.வெ.எண்: 846 நாள்: 16.12.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் 232 பதட்டமான வாக்குச்சாவடிகளுக்கு கூடுதல் பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (16.12.2019) ஊரக உள்ளாட்சி தேர்தலுக்கான பார்வையாளர் திருமதி.எஸ்.அமிர்தஜோதி இ.ஆ.ப., அவர்கள் தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தை நடத்தினார்கள். இக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பி.வி.அருண்சக்திகுமார், இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு பின் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தலுக்கு மொத்தம் 2,301 வாக்குச்சாவடிகள் அமைய பெற்றுள்ளன. கடந்த கால தேர்தல் நேரங்களில் நடைபெற்ற நிகழ்வுகளை கருத்தில் கொண்டு காவல்துறை, வருவாய்த்துறை மற்றும் உள்ளாட்சித்துறைகளுடன் இணைந்து மாவட்டத்தில் 232 வாக்குச்சாவடிகள் பதட்டமானவை என வகைப்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக மாவட்டம் முழுவதும் தேர்தல் நடவடிக்கைகளை 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. பதட்டமான வாக்குச்சாவடிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதில் தனிகவனம் செலுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக முன் எப்போதும் இல்லாத வகையில் மாநில தேர்தல் ஆணையம் உள்ளாட்சி தேர்தலுக்கு மாவட்ட அளவில் பறக்கும்படை முதல் முறையாக அமைத்துள்ளது. அந்த வகையில் புதுக்கோட்டையில் 21 குழுக்களாக

பறக்கும்படை அமைக்கப்பட்டுள்ளதுடன், பொதுமக்கள் தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிக்க மாவட்ட ஆட்சியரகத்தில் 04322-221691 என்ற எண்ணில் 24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட தேர்தல் கண்காணிப்பு அலுவலர் அவர்கள் இக்கூட்டத்தில் தேர்தல் அலுவலர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உள்ளிட்ட தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுடன் தேர்தல் தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், மேலும் தேர்தலின் போது கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் அலுவலர்களுக்கு எடுத்துரைத்தார்கள். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.காளிதாசன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**